9. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்).

நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவு, ஆய்வு செய்தல். 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1992). மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-10.

10. விதி 110-ன்கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை.

முன்னாள் தி.மு.க. ஆட்சியின்போது சென்னைப்பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அத்துமீறல்கள் மற்றும் முறை கேடுகள் குறித்து விசாரிப்பதற்காக கமிஷன் நியமிக்க அரசு எடுத்துள்ள முடிவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னர், பேரவை விதி 110-இன்கீழ் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை வைக்க அனுமதி கோரியுள்ளார். அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-ல் ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி, தன்னுடைய இரண்டாண்டு கால ஆட்சியில் சென்னைப் பல்கலைக் கழகத்தை, தனது கைப்பாவையாக ஆக்கிக் கொண்டு நடத்திய அத்து மீறல்கள், ஊழல்கள் பற்றி விசாரித்து அறிந்து, மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதை நாங்கள் உணர்கிறோம். பல்கலைக் கழக விதிகளுக்கு முரணாக முன்னாள் முதல்வர் கருணாநிதி, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை முன்கூட்டியே தேர்ந்தெடுத்து, அவரை சிண்டிகேட் மூலம் பதிவாளராக பல்கலைக்கழகத்தின் மீது திணித்து, பல்கலைக் கழகத்தை தி.மு.க. கைப்பற்றியது. இது பல்கலைக்கழகத்தின் தன்னாட்சி உரிமையைப் பறிப்பதற்கு ஒப்பாகும். நடைமுறையில்

உள்ள விதிமுறைகளுக்கு நேர் முரணானது. பிறகு, தனக்கு வேண்டிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களான ஊழியர்களையே முக்கியமான பொறுப்புகளுக்கு தி.மு.க. அரசு மாற்றியது ; நியமித்தது. முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு வேண்டிய பேராசிரியர் ஒருவருக்கு குறுகிய இடைவெளியில் இரண்டு பதவி உயர்வுகள், விதிகளுக்கு முரணாக சம்பள உயர்வுகள் தி.மு.க. அரசு கொடுத்துள்ளது. அவர்தான் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கும், பதிவாளருக்கும் இடையே இணைப்புப் பாலமாக இருந்து முன்னாள் முதலமைச்சரின் உத்தரவுகளாக வர உதவி வந்தவர். அவருக்கு வேண்டிய ஒருவருக்கு துறைத் தலைவர் பதவி தர வயது வந்தோர் கல்விக்கான துறையை பல்கலைக்கழக மானியக் குழுவின் யோசனைகளுக்கும், விதிகளுக்கும் மாறாக இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தி.மு.க. சிண்டிகேட் உறுப்பினரான ரகுமான்கான், காஞ்சனா கமலநாதன் ஆகியோர், கூடுதல் பிரிவுகள் வழங்கும் குழு, கட்டிடக் குழு போன்ற முக்கியக் குழுக்களில் திணிக்கப்பட்டனர். ஆங்கிலத்தில் அடிப்படைப் பட்டம் பெற்ற ஒருவரை, தமிழ்த்துறைத்தலைவராக நியமித்தனர். ஐ.ஏ.எஸ். அதிகாரியை பதிவாளராக நியமித்ததை அன்றிருந்த துணை வேந்தர் எதிர்த்தார். இறுதியில், அவர் பதவி துறக்க வேண்டிய நிலையை முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி உருவாக்கினார். மார்க்குகளைத் திருத்தியதாக உள்ள புகாருக்கு வேண்டியவரான ஒருவரை சிண்டிகேட் பதவி நீக்கம் செய்திருந்தது. முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் உத்தரவின் பேரில், மறுபடியும் அவர் பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். வரலாற்றுத் துறையில் தகுதி இல்லாத ஒருவரை முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு வேண்டிய ஒருவர் என்ற காரணத்திற்கா துறைத் தலைமை தரப்பட்டிருக்கிறது. தி.மு.க. வினரின் அச்சுறுத்தலின்பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர் சங்கத் தலைவர்களை பல்கலைக் கழகம் தொடர்ந்து தொல்லைகளுக்கு ஆளாக்கி வந்தது.

கோடம்பாக்கம் மீனாட்சி கல்லூரிக்கு தன்னாட்சி உரிமைதர எல்லாத்தகுதிகள் இருந்தும், எல்லாக் குழுக்களும் பரிந்துரைத்தும், முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உத்தரவின் பேரில், வாய் மூலம் தரப்பட்ட அனுமதி திரும்பப்பெறப்பட்டது. தாழ்த்தப் பட்ட வகுப்பினரின் காவலர் என்று பறைசாற்றிக் கொள்ளும் முன்னாள் முதல்வர் அவர்கள், அவர்களுக்குரிய பதவிகளைக்கூட கொடுக்க மறுத்து அந்தப் பதவிகளை தனக்கு வேண்டியவர்களைக் கொண்டு நிரப்பினார். இப்படி பல்கலைக்கழகத்தையே ஊழல் சாம்ராஜ்யமாக இரண்டாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதியும், அவரது ஆட்களும், அவரது நேரடிப் பார்வையில் நடத்திவந்த இவற்றை, தீர விசாரிக்க (மேசையைத் தட்டும் ஒலி), மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்காக, ஓய்வுபெற்ற முன்னாள் நீதிபதி அல்லது உச்ச நீதி மன்ற நீதிபதி அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

1992 ஏப்ரல் 24]

திரு. வி. தண்டாயுதபாணி : 'டைம் லிமிட்'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-லே வேண்டாம் (குறுக்கீடு) டைம் லிமிட் இவ்வளவுதான் என்பதை அறிவிக்கும் போது அறிவிப்பார்கள். இப்போது, அவைக்கு அந்தச் செய்தியைத் தெரிவித்திருக்கிறார்கள், அதாவது ஓய்வு பெற்ற முன்னாள் நீதிபதி அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு விசாரிப்போம் என்கிற செய்தியை அறிவித்திருக்கிறார்கள். மற்ற விவரங்கள் எல்லாம் அடுத்துவரும்.

9. சட்ட முன் வடிவு [ஆய்வு செய்தல்]—தொடர்ச்சி.

நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1992—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவின் மீது விவாதம். திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992, நிதியொதுக்க மசோதாவின் மீது, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக்கூற விரும்புகிறேன். வருகிற 30-ஆம் தேதி, என்னுடைய தொகுதியான வாலைகுளத்தில், மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள விமான நிலையத்தை, துவக்குகின்ற அந்த விழாவிலே கலந்துகொண்டு, துவக்கி வைப்பதற்கு வருகை தரவிருக்கிற தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு சிதம்பரனார் மாவட்டத்தினுடைய மக்களின் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் மிகுந்த மகிழ்ச்சியையும், வரவேற்பையும் இந்த நேரத்திலே முதன்முதலாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-15

இந்த அரசு பொறுப்பேற்ற 10 மாத காலத்திற்குள் ஏழை மக்களுடைய நல்வாழ்விற்காகவும், கிராமப்புறத்தினுடைய முன்னேற்றத்திற்காகவும் பல மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களைத் தீட்டி, செயலாற்றி வருகின்றது. அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்ன நோக்கத்திற்காக இந்த அரசு திட்டங்களைத் தீட்டி, செயலாற்றி வருகின்றதோ அந்தத் திட்டங்கள் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேர்ந்தால்தான் அந்தத் திட்டங்கள் வெற்றி பெற்றதாகக் கருத முடியும். திட்டங்களைத் தீட்டுகின்ற பொறுப்பு அரசினுடைய கையிலே இருந்தாலும்கூட, அந்தத் திட்டங்களை செயலாக்குகின்ற பொறுப்பு அதிகாரிகளுடைய கையிலே இருக்கின்ற காரணத்தால் அதிகாரிகள் செய்கிற தவறுகள் காரணமாகத் திட்டங்கள் முழுமையாக வெற்றி பெறுவதில்லை. ஆகவே, தவறு செய்கிற அதிகாரிகளைக் கண்காணிப்பதற்கு மாவட்ட அளவிலே சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு கண்காணிப்புக் குழுவை நியமிக்க வேண்டுமென்று அரசை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.